FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318713

1. District : Vellore PS: V.A.C Vellore Year: 2026 FIR No.: 07/2026 Date: 28.08.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Sections பிரிவுகள்: 7 of PC (Amendment) Act 2018
(ii) Act சட்டம்: (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: BNSS Sections பிரிவுகள்: 106 BNS.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 27.08.2026 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period : Time from : Time to :
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
(b) Information Received at PS. Date : 28.08.2026 Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
(c) General Diary Reference : Entry No(s) Vol 1 Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Written
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: The Block Development Office, Vellore Block, Vellore District. 1/2 km east
குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. R. Muthupandi (b) Father's/ Husband's Name : D. Rajan
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 49 yrs (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Inspection Cell officer (g) Address : Inspection Cell office District collectorate, Vellore
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. Tr. R. Thirumalai, Block Development Officer (BP), Vellore
2. Tr. K. Sathiyamoorthy, Block Development Officer (VP), Vellore
3. Tr. Karthikeyan, Overseer, Engineering Section, o/o. the BDO, Vellore
4. Tr. Vijay, computer Operator, Computer Section (Contract Basis), o/o
5. Tr. Mohana Selvan, Computer operator, VB-G Ramb (NREGS/SBM) BDO, Vellore
8. Reasons for delay in reporting by the complainant / Informant: Contract Basis, o/o. the BDO, Vellore
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Enclosed Separate Sheet

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதல் குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

R. M 28/8/26

28.08.2026.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
28.08.2026 @ 18.15 hrs.

Name பெயர் (G. MYTHILY)
Rank நிலை Inspector of Police

பணிந்து அனுப்பப்படுகிறது:- இன்று 28.08.2026-ஆம் தேதி 17.00 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது திரு.R.முத்துபாண்டி, ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர் என்வர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின்பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த விவரம் பின்வருமாறு:- வேலூர் 28.08.2026 அனுப்புநர்:- R.முத்துபாண்டி, ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9. பெறுநர் :- துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர், வேலூர் மாவட்டம். அய்யா, நான் வேலூர் இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கான மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகத்தில் ஆய்வுக்குழு அலுவலராக பணிபுரிந்துவருகிறேன். வேலூர் மாவட்டம், வேலூர் மாநகரம், வேலூர் ஆபிசர்ஸ் லைன், ராஜா தியேட்டர் பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் அமைந்துள்ள வேலூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் (VB-G RAM G) கீழ் கிராம மக்களுக்கு வேலை அட்டை வழங்குவது, நூறு நாள் வேலை வாய்ப்பை உறுதி செய்வது, ஊரக பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள், பிரதம மந்திரி கிராம திட்டம் (PMAY-G) மற்றும் இதர மாநில அரசின் வறுமைக்கோட்டிற்கு கீழுள்ளவர்களுக்கான இலவச வீட்டு வசதித் திட்டங்கள், மகளிர் சுய உதவிக்குழுக்குளுக்கு தேவையான உதவிகள், முதியோர் உதவித்தொகை போன்றவைகளுக்காக வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்குவரும் பொது மக்களிடம் அவர்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்காக வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலக அலுவலர்கள் தனித்தனியாக அவரவர் செய்து முடிக்க வேண்டிய பணிகளுக்காக நேரடியாக கையூட்டு பெறுவதாக வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களின் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலரான எனக்கு 27.08.2026-ஆம் தேதி சுமார் 13.00 மணிக்கு கிடைக்கபெற்ற தகவலை எனக்கு நம்பகமான தகவலர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்துகொண்டு, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் திரு.S.சங்கர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து, வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களின் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் R.முத்துபாண்டி ஆகிய என் தலைமையில், மாலை 14.30 மணிக்கு அலுவலகத்தில் இருந்து புறப்பட்டு, வேலூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் இருதுறை திடீர் சோதனை மேற்கொள்ள மாலை சுமார் 14.45 மணிக்கு வந்து சேர்ந்து, வட்டார வளர்ச்சி அலுவலகத்தை குழுவினருடன் கண்காணித்துக்கொண்டிருந்தபோது, தரைதளத்தில் பொதுமக்கள் சிலர் நின்றிருந்தனர். வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்குள் குழுவினருடன் நுழைந்து இடது பக்கத்தில் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) என எழுதப்பட்டிருந்த அறைக்குள் சென்று பார்க்க அங்கு இருக்கையில் யாரும் இல்லை பின்னர் அங்கிருந்த நபரிடம் வட்டார வளர்ச்சி அலுவலர் குறித்து கேட்க அவர் முதல் தளத்தில் இருந்து ஒரு நபரை அழைத்து வந்தார் அந்த நபரிடம் மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள், தன்னையும் குழுவினரையும் அறிமுகப்படுத்திக்கொண்டும், வந்த நோக்கத்தை தெரிவித்து, அவரை விசாரிக்க, அவர் தன்னுடைய பெயர் K.சத்தியமூர்த்தி என்றும் கடந்த 02.07.2026 முதல்

தற்போதுவரை வேலூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி)-ஆக பணிபுரிந்துவருவதாக கூறினார். சிறிது நேரத்தில் திரு.R.திருமலை, ஆணையாளர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அலுவலகம் வந்து தன்னை அறிமுகம் செய்துகொண்டவரிடம் மற்றும் ஆஜரில் இருந்த அலுவலர்கள் முன்பாக சோதனைக்கு வந்த அலுவலர்கள் தங்களை அறிமுகப்படுத்திக் கொண்டும் தங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்திகொண்டும் தங்களிடம் எந்த பணமும் இருப்பில் இல்லை என்று அலுவலக ஊழியர்களுக்கு உறுதி செய்து காண்பிக்கப்பட்டது. தரைதளத்தில் உள்ள ஆணையாளர் / வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அவர்களின் அறையில் ஒரு மேஜை மற்றும் இரண்டு கணினிவைக்கும் மேஜைகள் உள்ளன, அந்த அறை மற்றும் மேஜைகளை சோதனை செய்ததில் பணம் ஏதும் இல்லை. மேலும் அந்த அறைக்கு வெளியே நின்று இருந்த பொதுமக்களை விசாரித்தும் திரேக சோதனை செய்ய 1) திரு.குமார், த/பெ.ராஜீ, ஒன்றிய கவுன்சிலர், வேலூர், என்பவர் வசம் பணம் ரூ.6,570/- இருந்தது குறித்து விளக்கம் கேட்க அப்பணத்தில் ரூ.1070/-க்கு சரியான காரணம் கூறியதால் அப்பணம் அவரிடம் திரும்ப கொடுக்கப்பட்டது மீதம் உள்ள பணம் ரூ.5,500/- சரியான காரணம் கூறாததால் அப்பணம் விசாரணை நிமித்தம் கைப்பற்றப்பட்டது, 2) திரு.வெங்கடேசன், த/பெ.கோவிந்தசாமி, நெ.79/A, ஆலமரத்தெரு, சிறுகாஞ்சி, சதுப்பேரி அஞ்சல், வேலூர் 3) திரு.திருக்குமார், த/பெ. கிருஷ்ணன், நெ.248, காந்திமெயின் ரோடு, சதுப்பேரி கிராமம் & அஞ்சல், வேலூர், 4) திரு.வேலுமணி, த/பெ.கணேசன், நெ.4/55, பாரதியார் தெரு, கோவிந்த ரெட்டிபாளையம், ஊசூர், அணைக்கட்டு தாலுக்கா, வேலூர் மாவட்டம், 5) திரு. டெல்லிபாபு, த/பெ. சீனீவாசன், நெ.36, பிள்ளையார் கோயில் பின்புறம், கஸ்பா, வேலூர், ஆகியோர்களிடம் பணம் ஏதும் இல்லை, 6) திருமதி.தங்கமணி, க/பெ.குமார், சோலைக்கோட்டை கிராமம், சந்தவாசல், திருவண்ணாமலை மாவட்டம் என்பவர் வசம் பணம் ரூ.500/- இருந்தது, 7) திரு.காசி, த/பெ.முருகன், நெ.2/102, சத்யவாணி முத்து தெரு, சின்ன சேக்கனூர், ஒசூர் அஞ்சல், அணைக்கட்டு தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவரிடம் பணம் ஏதும் இல்லை, மேற்சொன்ன நபர்கள் தங்கள் வசம் இருந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் மற்றும் உரிய விளக்கம் கூறியதால் அவர்கள் வசம் இருந்த தொகை அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேற்படி வட்டார வளர்ச்சி அலுவலர் (வட்டார ஊராட்சி) அவர்களின் அறைக்கு அடுத்து உள்ள பொதுப்பிரிவு அறை பார்க்க அங்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர், கணக்காளர், உதவியாளர், இளநிலை உதவியாளர் மற்றும் பதிவுறை எழுத்தர் ஆகியோர்களின் இருக்கைகள் உள்ள அந்த அறையை சோதனை செய்ததில் பணம் ஏதும் இல்லை. மேலும் அந்த அறையில் இருந்த அலுவலர்களை விசாரித்து திரேக சோதனை செய்ய 1) திரு.திருமலை, வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ.620/- இருந்தது, 2) திருமதி. ஜெயாலினி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (பொது), பொதுப்பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம் என்பவரிடம் பணம் ரூ. 370/- இருந்தது, 3) திருமதி. ஸ்ரீபிரியா, கணக்காளர், பொதுப்பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம் என்பவரிடம் பணம் ரூ. 130/- இருந்தது, 4) திருமதி.மகாலட்சுமி, இளநிலை உதவியாளர், பொதுப்பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம் என்பவரிடம் பணம் ரூ. 180/- இருந்தது, 5) திரு. ஆனந்தன், பதிவுறை எழுத்தர், பொதுப்பிரிவு, வேலூர்

வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ. 210/- இருந்தது, 6) திரு. முனுசாமி, பதிவுறை எழுத்தர் (Record file), பொதுப்பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ. 70/- இருந்தது, 7) திருமதி.சிவசங்கரி, உதவியாளர், பொதுப்பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ. 200/- இருந்தது, 8) திருமதி.ரம்யா, உதவியாளர், பொதுப்பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ. 260/- இருந்தது, 9) செல்வி.கனிமொழி, உதவியாளர், பொதுப்பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ. 230/- இருந்தது, 10) திருமதி.ஷகிலா, இளநிலை உதவியாளர், பொதுப்பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ. 500/- இருந்தது, 11) திரு.ரீகான், அலுவலக உதவியாளர், பொதுப்பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ஏதும் இல்லை, 12) திரு.அருள், வாகன ஒட்டுநர், வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ.3200/- இருந்தது, 13) திரு.லஷ்மிகாந்தன், வாகன ஒட்டுநர், வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ஏதும் இல்லை, மேற்கண்ட அலுவலர்கள் தங்களிடம் உள்ள பணத்திற்கு தக்க முகாந்திரம் கூறியவர்களின் பணத்தை விசாரணைக்கு பின்னர் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி பொதுப்பிரிவு அறைக்கு எதிரே அமைந்துள்ள கணினி பிரிவு அறையை பார்க்க அங்கு ஐந்து கணினிகள் பொருத்துப்பட்டுள்ளது அந்த அறையை சோதனை செய்ய பணம் ஏதும் இல்லை. மேலும் அந்த அறையில் இருந்த அலுவலர்களை விசாரணை செய்து திரேக சோதனை செய்ய 1) திருமதி.சாந்தி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர், சத்துணவு பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ.200/- இருந்தது, 2) திரு.விமல் குமார், தட்டச்சர், சத்துணவு பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ.1200/- இருந்தது, 3) திரு.விஜய், கணினி உதவியாளர் (Contract Basis), கணினி பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ.220/-, 4) செல்வி.தனலட்சுமி, கணினி உதவியாளர் (Contract Basis), கணினி பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ.350/- இருந்தது, 5) திருமதி.கலைவாணி, கணினி உதவியாளர் (Contract Basis), கணினி பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ.160/- இருந்தது, மேற்கண்ட அலுவலர்கள் தங்களிடம் உள்ள பணத்திற்கு தக்க முகாந்திரம் கூறியவர்களின் பணத்தை விசாரணைக்கு பின்னர் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் கணினி பிரிவில் உள்ள திரு.விஜய், Computer Operator தற்காலிக பணியாளராக பணிபுரியும் நபரின் செல்போனை வாங்கி பார்க்க அதில் G-pay மூலமாக அவருக்கு 22.06.2026 முதல் 17.08.2026 வரையில் 9 பணபரிவர்தனைகள் மூலமாக பணம் ரூ.55,500/- வந்துள்ளது குறித்து கேட்க அதற்கும் அவர் சரியான விளக்கம் ஏதும் கூறாததால் சந்தேக பரிவர்தனை என்ற அடிப்படையில் விசாரணையின் பொருட்டு G-pay மூலமாக செல்போனில் வரப்பெற்ற விவரத்தை Screenshot எடுக்கப்பட்டு அதனை நகல் எடுத்து அதில் திரு.விஜய் அவர்களிடம் கையொப்பம் பெறப்பட்டு விசாரணை நிமித்தம் கைபற்றப்பட்டது. மேலும் கணினி அறை அடுத்து உள்ள சமுக நல பிரிவு, மன்ற கூடம் மற்றும் ஒன்றிய குழ தலைவர் அறை ஆகியவை பூட்டப்பட்டுள்ளது, மேலும் பதிவு வைப்பு அறை மற்றும் பொது கழிப்பிடம் ஆகியவைகளை சோதனை செய்ய பணம் ஏதும் இல்லை. அடுத்ததாக முதல் தளத்திற்கு சென்று இடது பக்கத்தில் உள்ள வட்டார

வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்களின் அறையை சோதனை செய்ய பணம் ஏதும் இல்லை. பின்னர் திரு.சத்தியமூர்த்தி, வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) வேலூர் அவர்களின் செல்போனை வாங்கி பார்க்க அதில் G-pay மூலமாக அவருக்கு கடந்த 05.07.2026 முதல் 20.08.2026 வரை 9 பண பரிவர்தனைகள் மூலமாக பணம் ரூ.70,500/- வந்துள்ளது. அது குறித்து கேட்க அதற்கு அவர் சரியான விளக்கம் ஏதும் கூறாததால் சந்தேக பரிவர்தனை என்ற அடிப்படையில் விசாரணையின் பொருட்டு G-pay மூலமாக செல்போனில் வரப்பெற்ற விவரத்தை Screenshot எடுக்கப்பட்டு அதனை நகல் எடுத்து அதில் திரு.சத்தியமூர்த்தி அவர்களிடம் கையொப்பம் பெறப்பட்டு விசாரணை நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பிறகு வட்டார வளர்ச்சி அலுவலர் (கிராம ஊராட்சி) அவர்களின் அறைக்கு அடுத்து உள்ள திட்ட பிரிவு அறை பார்க்க அங்கு துணை வட்டார வளர்ச்சி அலுவலர், கணக்காளர், உதவியாளர் மற்றும் இளநிலை உதவியாளர் ஆகியோர்களின் இருக்கைகள் உள்ள அந்த அறையை சோதனை செய்ததில் பணம் ஏதும் இல்லை. மேலும் அந்த அறையில் இருந்த அலுவலர்களை விசாரித்து திரேக சோதனை செய்ய 1) திரு.சத்யமூர்த்தி, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ.380/- இருந்தது, 2) திருமதி.பாக்கியலட்சுமி, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (தணிக்கை), வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ.270/- இருந்தது, 3) திருமதி.ஷீலா, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (ஊராட்சிகள்), வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ.1000/- இருந்தது, 4) திருமதி.அனிதா, கணக்காளர், திட்டப்பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ.60/- இருந்தது, 5) திரு.கமல்ராஜ், உதவியாளர், திட்டப்பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ.220/- இருந்தது, 6) திரு.முத்துகுமார், உதவியாளர், திட்டப்பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ.1,037/- இருந்தது, 7) திரு.சாந்தகுமார், ஊர் நல அலுவலர் நிலை-II, திட்டப்பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ.45/- இருந்தது, 8) திருமதி.சிவரஞ்சிதா, தட்டச்சர், திட்டப்பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ.150/- இருந்தது, 9) திரு.அவினாஷ், கணினி உதவியாளர், (Contract Basis) திட்டப்பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ.1050/- இருந்தது, 10) திரு.சந்திரசேகர், கணினி உதவியாளர், (Contract Basis) திட்டப்பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ.300/- இருந்தது, 11) திரு.குமரேசன், கணினி உதவியாளர், (Contract Basis) திட்டப்பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ஏதும் இல்லை, 12) திருமதி. மதுமதி, கணினி உதவியாளர், (Contract Basis) திட்டப்பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ.70/- இருந்தது, மேற்கண்ட அலுவலர்கள் தங்களிடம் வைத்திருந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூறியவர்களின் பணத்தை விசாரணைக்கு பின்னர் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி திட்ட பிரிவு அடுத்து ஆண்கள் மற்றும் பெண்களுக்கு தனித்தனியாக பொதுக்கழிப்பிடம் உள்ள இடத்தை சோதனை செய்ய அங்கு பணம் ஏதும் இல்லை அதற்கு அடுத்துள்ள பொறியியல் பிரிவு அறையை சோதனை செய்ய அங்கு பணம் ஏதும் இல்லை மேலும் அந்த அறையில் இருந்த அலுவலர்களை விசாரித்து திரேக சோதனை செய்ய 1)திருமதி.வித்யாலட்சுமி,

உதவி பொறியாளர், பொறியியல் பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், 2) திரு. கார்த்திகேயன், பணி மேற்பார்வையாளர், பொறியியல் பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், 3) திருமதி.தமிழ்ச்செல்வி, பணி மேற்பார்வையாளர், பொறியியல் பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், 4) திருமதி.மகாலட்சுமி, மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர், வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், 5) திருமதி.அமுதாநவீனா, சாலை ஆய்வாளர், பொறியியல் பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், மற்றும் 6) திரு.பாஸ்கரன், கணினி உதவியாளர், (Contract Basis) பொறியியல் பிரிவு, வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், ஆகியோரை சோதனை செய்ததில் அவர்களிடம் பணம் ஏதும் இல்லை. மேலும் பொறியியல் பிரிவில் உள்ள திரு.கார்த்திகேயன், ஓவர்சியர் என்பவரின் செல்போனை வாங்கி பார்க்க அதில் G-pay மூலமாக அவருக்கு கடந்த 15.07.2026 முதல் 08.08.2026 வரை 3 பண பரிவர்தனைகள் மூலமாக பணம் ரூ.14,000/- வந்துள்ளது. அது குறித்து கேட்க அதற்கு அவர் சரியான விளக்கம் ஏதும் கூறாததால் சந்தேக பரிவர்தனை என்ற அடிப்படையில் விசாரணையின் பொருட்டு G-pay மூலமாக செல்போனில் வரப்பெற்ற விவரத்தை Screenshot எடுக்கப்பட்டு அதனை நகல் எடுத்து அதில் திரு.கார்த்திகேயன் அவர்களிடம் கையொப்பம் பெறப்பட்டு விசாரணை நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேற்படி பொறியியல் பிரிவு அறைக்கு அடுத்து உள்ள VB-G RAM G (NREGS/SBM) பிரிவு அறையை சோதனை செய்ய அங்கு பணம் ஏதும் இல்லை, மேலும் அந்த அறையில் இருந்த அலுவலர்களை விசாரித்து திரேக சோதனை செய்ய 1) திரு.சக்திவேல், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (VB-GRAM G Section), வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ.280/- இருந்தது, 2) திருமதி.ரம்யா, உதவியாளர் (VB-GRAM G Section), வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ.60/- இருந்தது, 3) திருமதி.அபிராமி, உதவியாளர் (VB-GRAM G Section), வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ.300/- இருந்தது, 4) திரு.கருணாநிதி, கணினி உதவியாளர் (Contract Basis) (VB-GRAM G Section), வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ.450/- இருந்தது, 5) திரு.மோகன செல்வம், கணினி உதவியாளர் (Contract Basis) (VB-GRAM G Section), வேலூர் வட்டாரம், வேலூர் மாவட்டம், என்பவரிடம் பணம் ரூ.60/- இருந்தது, மேற்கண்ட அலுவலர்கள் தங்களிடம் வைத்திருந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூறியவர்களின் பணத்தை விசாரணைக்கு பின்னர் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி VB-G RAM G (NREGS/SBM) பிரிவில் உள்ள திரு.மோகன செல்வன், Computer Operator என்பவரின் செல்போனை வாங்கி பார்க்க அதில் G-pay மூலமாக அவருக்கு கடந்த 24.07.2026 முதல் 22.08.2026 வரை 8 பண பரிவர்தனைகள் மூலமாக பணம் ரூ.51,000/- வந்துள்ளது. அதுகுறித்து கேட்க அதற்கு அவர் சரியான விளக்கம் ஏதும் கூறாததால் சந்தேக பரிவர்தனை என்ற அடிப்படையில் விசாரணையின் பொருட்டு G-pay மூலமாக செல்போனில் வரப்பெற்ற விவரத்தை Screenshot எடுக்கப்பட்டு அதனை நகல் எடுத்து அதில் திரு.மோகனசெல்வன் அவர்களிடம் கையொப்பம் பெறப்பட்டு, விசாரணை நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேற்படி வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் வெளிப்புற பகுதிகளில் சோதனை மேற்கொள்ளப்பட்டதில் தரைதளத்தில் உள்ள பொதுப்பிரிவு அறையின் ஜன்னலுக்கு அருகில் கத்தையாக பணம் இருந்தது அப்பணத்தை

எண்ணிப்பார்க்க ரூபாய் 2000/- (500 x 4 = Rs 2000) ம் இருந்தது அப்பணம் குறித்து பொதுப்பிரிவில் உள்ள அலுவலர்களிடம் கேட்க அப்பணம் குறித்து யாரும் உரிமை கோராததால் அப்பணம் விசாரணை நிமித்தம் கைப்பற்றப்பட்டது. அதனை தொடர்ந்து சோதனை மேற்கொண்டதில் முதல் தளத்தில் உள்ள VB-G RAM G அறையின் முன்னதற்கு வெளிபுறம் நோக்கி கீழ்பகுதியில் நிறுத்தியிருந்த காரின் மேல் பகுதியில் பணம் கத்தையாக இருந்தது அப்பணத்தை எண்ணிப்பார்க்க ரூபாய் 2,000/- (500 x 4 = Rs 2000) இருந்தது அப்பணம் குறித்து VB-G RAM G (NREGS/SBM) உள்ள அலுவலர்களிடம் கேட்க யாரும் உரிமை கோராததால் அப்பணம் விசாரணை நிமித்தம் கைப்பற்றப்பட்டது. அதன்பின்னர் வட்டார வளர்ச்சி அலுவலக வளாகத்தில் நிறுத்தியிருந்த அனைத்து வாகனங்களையும் சோதனை செய்ததில் பணம் எதும் இல்லை. மேலும் திரு.குமார், த/பெ.ராஜி, ஒன்றிய கவுன்சிலர், வேலூர், எண்.338, புலிமேடு, கொல்லைமேடு, வேலூர் தாலுக்கா, வேலூர் மாவட்டம் என்பவரிடம் அவர் வைத்திருந்த பணம் குறித்து விசாரணை செய்ய, அவர் தன்னுடைய பகுதியில் உள்ள ஒரு கழிவு நீர் வாய்க்கால் வேலைக்கான உத்தரவு சம்பந்தமாக வந்திருப்பதாகவும், அந்த வேலையை வேறு ஒருவர் செய்துள்ளதாகவும் முன்னான தகவலை தெரிவித்தார், அவரிடமிருந்த தொகைக்கு சரியான விளக்கம் அளிக்காததால் ரூ.5,500/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த இருதுறை தீடீர் சோதனையில், தக்க முகாந்திரம் கூறாத தொகை மற்றும் உரிமை கோராத பணம் மொத்தம் ரூ.9,500/- இந்த பணம் வட்டார வளர்ச்சி அலுவலக அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருக்களாம் என்ற சந்தோகம் உள்ளதால் இந்த பணத்தை விசாரணை நிமித்தமாக கைப்பற்றப்பட்டன. மேலும் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் உள்ள அலுவலர்களின் செல்போனில் G-Pay பரிவர்தனை முலமாக 1)திரு.சத்தியமூர்த்தி, BDO (VP) என்பவர் பணம் ரூ.70,500/-, 2)திரு.கார்த்திகேயன், ஒவர்சியர் என்பவர் பணம் ரூ.14,000/-, 3)திரு.விஜய், தற்காலிக பணியாளர் பணம் ரூ.55,500/- மற்றும் 4)திரு.மோகன செல்வன், தற்காலிக பணியாளர் பணம் ரூ.51,000/- பணப்பலன் பெற்றுள்ளார்கள் என்ற சந்தேகம் உள்ளதால் அதற்கான விவரங்களை நகல் எடுத்து சம்மந்தப்பட்டவர்களிடம் கையொப்பம் பெறப்பட்டுள்ளது. மேற்படி இருதுறை தீடீர் கூட்டு சோதனையானது, 27.08.2026-ஆம் தேதி சுமார் 15.00 மணிக்கு தொடங்கப்பட்டு 22.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்கொள்ளப்பட்ட நிகழ்வுகள் அனைத்தையும் இருதுறை தீடீர் கூட்டு சோதனை செயல்முறை தயார் செய்யப்பட்டது. இந்த இருதுறை தீடீர் கூட்டு சோதனையின்போது, வேலூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களுக்கு அவர்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்காக வட்டார வளர்ச்சி அலுவலர்கள் (கி.ஊ) மற்றும் (வ.ஊ) மற்றும் பிற அலுவலர்களுக்கு லஞ்சமாக கொடுக்க எத்தனித்து தன் வசம் வைத்திருந்த மற்றும் உரிமை கோராத பணம் ரூ.9,500/-, மற்றும் 6 ஆவணங்கள்/ பதிவேடுகளின் நகல்கள் மற்றும் இருதுறை தீடீர் கூட்டு சோதனை செயல்முறை ஆகியவற்றை தங்களிடம் ஒப்படைக்கிறேன். தனது பதவியை துஷ்பிரயோகம் செய்து வேலூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் லஞ்சமாக பெற எத்தனித்த திரு.திருமலை, BDO (BP), திரு.சத்தியமூர்த்தி, BDO (VP), திரு.கார்த்திகேயன், ஒவர்சியர் மற்றும் தற்காலிக பணியாளர்களான திரு.விஜய் மற்றும் திரு.மோகனசெல்வன் ஆகியோர் மீது சட்டரீதியான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். ஒம்/-xxxxxx (R.Muthupandi) 28/8/26 (R.முத்துபாண்டி,

ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9).

Sir.

Received the complaint on 28.08.2026 and after getting oral permission from the DVAC, Chennai. I am registering a case in Vellore V&AC Cr.No.07/2026 u/s. 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 r/w 106 BNSS on 28.08.2026 at 17.00 hrs. Sd/- xxxxx (G.Mythily) 28.8.2026, Inspector of Police, V&AC, Vellore.

The FIR in original along with the complaint, Joint Surprise Check proceedings in original and 6 Xerox documents attested sent to the Hon'ble Principal District and Sessions Court, Vellore and sent the copies to the officers concerned.

28.08.2026

(G.MYTHILY)
Inspector of Police
V&AC, Vellore.